9683

உ

குமரன்றுணை.

திருக்கோட்டாற்றுத்
தேசிவிநாயகர்
பன்மணி மாலை.

இது

கோட்டாறு

வீ. சு. பழனிக்குமாரு பண்டாரம் அவர்கள்

இயற்றியது.

ஷை

தேசிவிநாயகராலயத்

தருமகருத்தா

கு இராமநாதன் செட்டியாரவர்கள்

தமது பொருட் செலவினால்

நாகர்கோவில்,

விக்றோரியாப் பிறஸில்

அச்சடிக்கப்பட்டது.

ஆனந்த வருடம். (1914)

உ

முருகன்றுணை.

சிறப்பாயிரம்.

கோட்டாறு

தமிழ்வித்வான், அன்பளிப்பு

ம. ரா. ரா. ஸ்ரீ ரீ. கணபதி ஆசாரி அவர்கள் குமாரர்

க. சுவாமிநாத ஆசாரி அவர்கள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

புண்ணியச் சேரர் புரவலர் வஞ்சித்
திண்ணிய மூலந் திருநாள் மன்னர் தஞ்
செந்நெற் களஞ்சிய மென்னச் சிறந்த
நாஞ்சி நாட்டுள் நலமிக வளரும்
பற்பல தேயப் பண்ட மனைத்துந்
தன்னிடத் தடக்கியெத் தரணிக்குந் தருங்
கோட்டாற் றிற்பவக் கேட்டைக் கெடுக்குங்
கருணைத் தடங்கட லாகிய கயமுக
அறுதி மூர்த்தியா மமல தேசி
விநாயகன் பாத மென்மல ரிணையில்
ஐந்திலக் கணமுந் ஐயந் திரிபறக்
கற்றவ னெமது கண்மணி போல்பவன்
செய்வன தெளிந்தே செய்யுஞ் செயலினன
மெய்வகை விளக்கும் வீர சைவன்
யழனிக் கெனக்கவி பாடும் புலமைப்
பழனிக் குமாருப் பாவல னன்பால்

அமிழ்தினு மினியசெந் தமிழா மாழியின்
மதியெனுந் தோணி வழியே சென்றுமற்
றகப்பொருள் புறப்பொரு ளகப்புறப் பொருள்நற்
புறப்புறப் பொருள்களாம் புரைதீர்ந் துள்ள
அளப்பரு மணிகளை யள்ளித் திரட்டித்
தெள்ளிய பொருளாத் தெளிவு தோன்ற
வெள்ளிய வுரையின் விளங்கத் தேய்த்துப்
பணுக்கி யியனெறிப் பாலுறு பாவு
நுணுக்கிக் காட்டி நுவலுபா வினமு
மாஞ்செம் பொன்களி னழகுற வமைத்துக்
குணந்தரும் புகழொளி கூர்தரக் கோததவிச்
சொன்மணி மாலையாம் பன்மணை மாலை
திறைவைத் தேத்தினன் செவ்விய அதனைக்
கதிதரு மணியெனக் கருதியக் கடவு
ளடிதொழுந் தொண்ட ரனைவருந் தத்த
மனப்பே டகத்தில் வைத்துப் போற்றிக்
கணிக்கவின் வாயாற் கழறிக் கதிபெறற்
காகுமென் றன்போ டச்சுவா கனத்தி
லேற்றிப் பவனி யெங்கணு மாகச்
செய்தன னவ்வருட் டேசிவி நாயக
னாலயக் காரிய மாசையி னடாத்துந்
தரும கருத்தாத் தானந் தாங்கினோன்
வுரிமையும் பொறையு முண்மையு மூக்கமு
முற்ற துணைகளென் றுளத்திற் பேணுவோன்
வற்றாச் செல்வ வைசியர் குலத்திற்
கணிகல னாகியே யமரும்
இராம நாதன் எனுங்கன வானே.

உ

குமரன்றுணை.

திருக்கோட்டாற்றுத்

தேசிவிநாயகர்

பன்மணி மாலை.

பாயிரம்.

தெய்வ வணக்கம்.

விநாயகர்

கலிவிருத்தம்.

காரி லங்கு கவின்பொழிற் கோடையிற்
சீரி லங்கருட் டேசிவி நாயகன்
பாரி லங்குயர் பன்மணி மாலைநல்
லேரி லங்கவவ் வண்ணலை யேத்துவாம்.

பரசிவம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அருவாகி யுருவாகி யருவுருவா யகிலசரா சரங்களாகிப், பொருளாகி மலர்மணம்போற் புகுந்துடலிற் சிவசிவப் போதங் காட்டுங், குருவாகி யைந்தொழிற்குங் குறியிடமா யருட்சத்திக் குடிய தாகித், திருவாகி யெனதுளத்திற் றிகழொளியாம் பரசிவத்தைச் சிந்தை செய்வாம்.

பராசத்தி.

எப்பொருட்குமப்பொருளாயெவ்வுயிர்க்குமவ்வுயிராயியைவாள் யாவ, ளொப்பரிய கிருத்தியங்களைந்தினுக்கு மாதாரமா மொருத்தி யாவள், செப்பரியநாதத்தின் றீங்கனியாய்ச் சிவமுளையாய்த் திகழ் வாள்யாவ, ளிப்பெரிய ளவளோவப் பெரும்பெரிய விறைவியையுள் ளெண்ணி வாழ்வாம்.

முருகக்கடவுள்.

பொறிபுலன்கட்கமையாத பொறியாறாய்ச் சரவணச்சண்முகத் தனாகி, யறுவர்முலை யுண்டயனைத் தளையிட்டுக் குருமொழிதன் னையற் கோதித், திறமொடுதண் கடலசுரத் திண்ணியவெவ் கடல்கலக்கித் தேவர்க் காத்துக், குறமகளை மணந்தெனக்குக் குருவான குமரனை யுட் கொண்டுய் வாமே.

திருநந்தி தேவர்.

முத்தொழிலோர் முதலானோர் முகிழ்த்தகர மெடுத்தேத்தி முடிகடாழ்த்துச், சித்தமொரு மித்திடித்துச் சேர்ந்திறைஞ்சும் பொ துநெருக்கந் திகழக்காக்கி, நித்தனெனு முமைபாகன் சந்நிதியி னீங்காத கருணை நீடிப், பத்தருளி னிர்த்தமிடும் பதச்சூற்றடையி னரைப் பணிந்து வாழ்வாம்.

சமயாசாரியர்.

ஒருவனத்தின் மறைக்கதவந் திறந்திடவு மடைத்திடவு முரை யோராற்றிட், டொருகுளத்தி லெடுத்திடவு முயர்பாக்க ளுரைத் தோரோருமைப் பெண்ணை, யருமைமிகும் வினாவிடைப்பாட் டருளி யானருளுரைக்கு மன்பினுக்கி, யுருகியுரு கிக்கரைந்தோ னிவர்சரண மொருமுடிமேற் கொள்ளுவோமே.

திருத்தொண்டர் முதலாயினோர்.

அரும்பரமன் றிருந்தவையின் முறிகாட்டி யடிமை யென்றன் றுளப்பட்டோ, னிருங்கருணை மிகுந்திசைத்த திருத்தொண்டத் தொ கைப்பட்ட விறைவனன்பர், சுரும்பருமு மலர்க்கழல்கள் சுரேசனடி யார்பதங்கள் சுடர்க்கோட்டாரும், பெருந்தலத்திற் றேசிவிநாயகன ன்பர் சரணமொடு பேணிவாழ்வாம்.

நூற்பயன்.

கோட்டாற்று வணிகர்தெருத் தேசிவிநா யகர்கருணைக் குணத்தை யேத்திப், பாட்டாற்றும் பணிவிடையாப் பகர்ந்தவிப்பன் மணிமாலை படிப்போர் கேட்போர், கேட்டாற்ற லகன்றுயர்நன் மனைவி மக்கட் செல்வமொடு கிழமை பூண்டிங், கூட்டாற்ற லுறவாழ்ந்தன் குயர்கதியும் பெறுவாரீ துண்மை மாதோ.

அவையடக்கம்.

கருவகற்றுந் தேசிவிநா யகனருள்சேர் கவிஞர்கண்முன் கல்லேனன்பிற், றிருமிகுத்த வுறுப்புகளார்ந் திலகுயர்பன் மணிமாலை செப்பற்குன்ன, லுருமிகுத்த வொருகூரன் சந்திரற்பார்த் தக்குறைத்தாங் குறினுந்தெய்வ, அருண்மிகுதரோர் முன்னவன்சொல் லாதலினற் கொள்வரென்றே யறைதன் மன்னே.

[பாயிர முற்றிற்று.]

நூல்.

நேரிசைவெண்பா.

தேன்மல்கி யூற்றிறைக்குந் தேமலரில் வண்டார்ந்துங்
கான்மல்கு கோட்டாற்றுக் கைம்முகனும்—பான்மல்கு
திங்க ளறுகணிந்த தேசிகவி நாயகன்ற
னங்கழல்க ணெஞ்சுக் கணி. (1)

கட்டளைக் கலித்துறை.

அணியாகு மொண்டலைக் கென்றடி சூட்டுநல் லன்பர்கடம்
பிணியாகுந் துன்பப் பிறப்பொழிப் பானற் பெருங்கருணைப்
பணியாகு வாகனன் கோட்டாற்றில் வாழும் பரன்சுதன்கண்
மணியாகுந் தேசிவி நாயகன் றன்புகழ் வாழ்த்துகவே. (2)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாழ்த்தாதே வாழ்கினறாய் மனமே யென்று
மாளாதே வாழ்ந்திடநீ மதித்தா யேனுட்
டாழ்த்தாதே கோட்டாற்று வணிகர் வீதி
தனிலமருந் தேசிகனைக் கையோன் றன்னைச்

சூழ்ந்தாதே யிருந்தகுறை தொலைப்பா னுன்னித்
தோத்திரித்துச் சூழ்ந்திரந்து தொழுதே துன்பத்
தாழ்ந்தாதே யருள்வாயென் றழுதெந் தாயோ
வந்தாவோ வென்றென்று மலறு வாயே. (3)

கலிவிருத்தம்.

வாயி னாலுனை வாழ்த்திலன் பூமியிற்
பேய னாகிப் பிதற்றினன் கோடையென்
னாய னாகிய தேசிவி நாயகா
காயி னானொழி வேன்செய் கருணையே. (4)

புயவகுப்பு

வண்ணம்.

கருணை யோடுகவி பாடி நின்றவள்
கயிலை சேருமரு ளாவ ளார்ந்தன
பரம னாருதவு போத ருங்கனி
பரிவி னோடுபெற வேயெ ழுந்தன
மருவு நீடவுண யானை பொன்றுற
மணிமொய் கோடுகொள வேயு வந்தன
வரிய கோடைவளர் தேசி யைங்கர
னறுகு லாவுதொடை யார்பு யங்களே. (5)

கலிவிருத்தம்.

புயலி லங்கிப் பொழியுஞ்சோட் டாற்றினம்
மயலி லங்கு வசைகெட வாழுழச்
செயலி லங்குகட் டேசிக யானையை
வியலி லங்கவி யம்பிநின் றேத்துமே. (6)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எத்தாதே போற்றாதே யெண்ணாதே யுழுவலன்பி னிறைஞ்சி டாதே, பாத்தானே வரப்பாடிப் பரவாதே கழிந்தேற்கென் பாலிப் பானோ, நாத்தானே தழுதழுப்ப நவிலுநருக் கினியவரு ணல்கும் பொய்மை, நீத்தானோர் வளர்கோடைத் தேசிகவி நாயகனா நிமலன் றானே. (7)

நேரிசைவெண்பா.

திருமாலன் றன் னீள்கதியி னேர்ந்திடுதற் குன்னிற்
கமலன் றன் புத்திசித்தி காதல்—விமலனுஞ்
சேண்டிகழ்காக் கோட்டாற்றுத் தேசிகவி நாயகனை
வேண்டி விரும்பிநின் மின்.

மறம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்னியலார் வல்லபையான் மிளிரருட்டே சிகவைங்கை மேலோன் கோட்டாற் றன்னியமா மலைக்குறவோ ருமோரா தெம்பெண்ணைவேட் டோலைதந்தான், றன்னியது நாவவனெங் கொளித்தானும் பிணமுருடர்வேந் தொலையாப் போரின், மன்னியசீர் வெட்சிமுதல் வல்லேமுன் னுயிர்ப்பிச்சை வரந்தந் தோமே. (9)

(இதுவுமது)

விருத்தத் தாழிசை.

வரங்கருங்கருணை யுளநிறைந்திலகி மருவுதேசிகவி நாயகர் வளமிகுந்தவுயர் கோடைநீடுவரை மன்னும்வேடர்குலமெமர்கள்பா, லிரந்துகொள்வதொரு கனியாயிலகு தேற்றசெய்க்கணுறும் பெண்ணையே, யிசைசையேலஃது கழியிலெய்துமென வெண்ண வேண்டியதெனுமலெம், பரந்ததாயபுக ழறிகிலா துரிய பசியகோதையையுள் வேட்கையாற், பகருமோலையது நீட்டினைவன் பாலிருந்துவரு தூதனே, கரந்தையோவலது காஞ்சியோ கடிய காவலாகவுறுநொச்சியோ, கடிதவற்றினது வெனினுமேகொளக் கழறுவாய் விடோம் கலகமே. (10)

தழை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலயமுனி கமண்டலநீர் கவிழ்த்தருடே சிகமுனிதன் கருணையாலே, யலகிறிரு வருட்கோட்டாற் றமர்வணிக ரும்பொழில்வாயந் தளிதேனூறி, யிலகுமிளந் தழையிவைதா மெவ்விடத்துங் கிடைப்பரிதென் னினிமையான, குலவிளக்காங் குயிலீருங் கொடியிடைக்காங் குணமொடென்கை கிடைத்ததாமே. (11)

(இதுவுமது)

விருத்தத் தாழிசை.

கிடையிலம்புலியை யுடையரைங்கையொரு கிளருகிம்புரிமொய் கொம்புகிண், கிணிசதங்கைமிளிர் பதமிலங்கவளர் கேடில் தேசிகர் தங் கோடையின், முடைததும்புநுதி வேலனின்பசிய முறியைவார மொடு தாங்கிவாண், முகமிரண்டெனவும் வாயமூன்றெனவு முலைக ணான்கெனவு மேனிதா, னடைவிலைந்தெனவு நகைகளாறெனவு மள கமேழெனவும் வீசுதே, சளவையொன்றுபல கோடியாமெனவு மா யிஞளதனை யாசையோ, டிடைவிடாதுபல புகழ்வளம்மியி லிசைத் தரைத்தக மடுத்தலொன், றிலாதுமற்றுளவெலா மியற்றின ளெம்மி றைவியாய விளமயிலியே. (12)

வஞ்சிவிருத்தம்.

மயிலின மன்றில்செவ் வாய்க்கிளிகள்
குயிலின மார்பொழிற் கோட்டாறதி
னயனரு டேசிவி நாயகர்பங்
கயவடி வாழ்த்துதல் கதியாமே. (13)

வஞ்சித்துறை.

கதிதருவான் கவின்கோடைப்
பதியிலருட் பதியாகித்
திதிசெய்யங்கைக் தேசிகன்றாள்
விதியொடுபூ விடுவார்க்கே. (14)

நேரிசைவெண்பா.

விடுத்து மலரடியில் வீசுநரைக் கோட்டாற்
றடுப்புகரட் டேசிக வும்பன்—றிடத்திற்
கணமோடு வாழக் கயிலைதனில் வைப்பான்
குணமோடு கைம்மலரிற் கொண்டு. (15

சம்பிரதம்.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டறவழ்கின்ற மணிமந்திரநிறைந்திலகு கோட்டாறெ பனாம் பதியினோர், குலவணிகர் மறுகினொரு கொம்பிரு முறச்செவி

கொழுக்கமும் மதலாரியோ, டண்டர்தொழ வமர்கின்ற தேசிக
விநாயகனன்பரு நிக்கெட்டினை. யாசையொடு சற்றேனு மஞ்சாது
பருகுவோமலகிலா வெட்டுவரையைக், கண்டிட வருந்துவோம்
வீட்டுளுந்திரிதரக் கானகம் பலகாட்டுவோங்கனிவோடி யாவருங்
காணவே மணலையுங் கயிறாக்கி ரிக்குவிடுவோ, மண்டுதிரிலோகங்
கண் மன்னுமகலெரியையும் வண்கையாலேந்திடுவமிவ், வகையான
வித்தைபல பலவாக வெம்போலிம் மாநிலத்தியார் செய்வரே. (16)

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

செய்யி லன்னந் திகழுந்திடும் பன்மணி
செந்நெ லன்னம்பொன் சேர்ந்திடுங் கோடையின்
மெய்ய னம்புலி மெல்லூரி யாடையன்
மெய்ய னம்புலி வேணிய னைங்கரன்
கையி லங்குச பாசத்தன் கஞ்சநற்
காலி லங்குச தங்கையன் கார்க்கடல்
வைய மேத்துநந் தேசிவி நாயக
வள்ள லைத்தொழு வார்வினை மாயுமே. (17)

கட்டளைக்கலித்துறை.

மாயும் புவியிடை மாயாத வாழ்வினில் வைத்திடுவான்
வேயும் புகழெழிற் றேண்மோகை யாதிய மெல்லியர்கோன்
தேயும் பிறையணி தேசிவி நாயகன் சீரடியைப்
பாயும் புகழ்த்திருக் கோட்டாற்றிற் போற்றப் பயனெனவே.(18)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பயனேநி றைந்த பழமேப ழுத்த பழமூறு தேனி ரதமே
நயனேமி குந்த நலமேயென் றுன்னை நவிலுமொந்நாளி லுறுமோ
வயனேபு ரிந்த மகமீதெ ழுந்த வருண்மாதர்க் காத லுடனே
மயனேவி ரும்பும் வளநீடுகோடைவளர்தேசிகைங்கைமணியே.(19)

தூது.

நேரிசைவெண்பா.

மணியுறுங்கிள் ளாயிவடன் மையலது தீர
வெண்ணியறுகம் பைந்தொடையை யீயென்—றணிமலியுங்

கோசிகமன் கோட்டாற்றுக் கோவணிகர் கோயினின்வாழ்
தேசிகவி நாயகன்பாற் செல். (20)

சித்து.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சென்னியிலம் புலியணிந்த தேசிவிநா யகனூர்
திகழ்கோடைத் தெரிவையரே தேசமெலா மறியக்
கன்னிநிலை கழிந்துகரு வீன்றிடினு மென்றுங்
கன்னியென்றே காட்டுவிப்பேங் கலங்காம லுமது
புன்னிலைய குமரிவளர் பருவமுதிர்ந் திடினும்
புவியுனவே குமரியென்றே புதுக்குவிப்பே மற்றும்
பன்னரிய சித்திபுளோம் பசிதீர மருந்து
பாலிப்பேம் பசிக்கற்பம் பழஞ்சோறீ வீரே. (21)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பழந்துணியுந் தையாதே கசக்காதே யரையுடுத்திப் பலியேற்றுண்டு, சுழன்றுமன மருண்டடியார் போனடித்துப் பித்தமொடு திவள்வாரோனுங், குழைநதுருகித் தேசிவிநாயககாவென் றனையேத் துங்குணமில்லாரே, லழிந்தாலுஞ்சாராத வருடருவாய் கோட்டாற் றென்னைங்கைத் தேவே. (22

நேரிசை வெண்பா.

ஐங்கரனைக் கோட்டாற்றி யானை முகவனைச்
சங்கரனூர் தந்த சலைகனைத்—துங்கவருட்
டேசிகவி நாயகனைச் சித்தமுட னேவணங்கிப்
பேசிநின்று போபெறுவர் பேறு. (23)

குறு.

ஆசிரியத்துறை.

போதத நிலையினளாப் பிரியாத மனமோடு பிதற்றி யென்பொன்
ஞோக் குயமுட னுழதழுதன் னருணடி யயர்ந்தானையா
சீராருங் கோட்டாற்றுத் தேசிவிநா யககண்
பாராதேயிருந்தனையேற் பழிக்காமன் றனக்குயிரும்பலியீவாளே. 24)

கைக்கிளை.

மருட்பா.

வாட்கண் விளைத வயிற்றுதித்த வாண்மயிலைத்
தாட்கமல மேச்சித் தரவாங்கு—வேட்கையொடு
கானடத்திப் பின்னயில்வேற் கந்தனுக்கீர் தாருவைக்
தானடத்துந் தேசிகனுந் தந்திமுகத—தோனமருங்
கோட்டாற்றி லென்னுளம்போற் கூர்ந்தன் மலர்வாடுந்
தாட்டா மரைகளைப்பூத் தாங்குமாற்—கோட்டாத
கண்ணுடைய பொன்னன்று காணின்
மண்ணுடைய பொன்னே மாலுறவந் தவளே. (25)

வெண்செந்துறை.

வந்திக்கிற் கோட்டாற்று வாரணமாந் தேசிகக்
கந்தக்க ணேசன் கதிபெற லாமே. (26)

நேரிசை வெண்பா.

ஆகுக் கொடியானே யைங்கரனே யங்குசனே
பாகுக் குளமிசைந்த பண்ணியனே—பூக்காக்
கோட்டாற்றுத் தேசிகவோர் கொம்போனே யென்றுசொல
மாட்டாதார் வாய்கோறை வாய. (27)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாயுந்து திக்கு மனமுங்கு ளிர்ந்து மகிழும்பி றங்கு டலமார்
நோயுந்த விர்ந்து நுகரின்ப மோங்கிநொடியின்றி வீடுமுறும்வன்
பேயுந்து திக்கு முயர்கோடை மேவு பிரமன்பு தல்வியிருவர்
தோயுந்துதிக்கைநிகழ்தேசிகேசர்துணைத்தாணினைந்துதொழவே.(28)

கலித்தாழிசை.

தொழுநற் றேசிகன் றுய்த்திட மாறரு
மழமுங் நான்குயர் மாதரோ
மழமுங் நான்குயர் மாதர்க ணேசனைப்
பழய கோடையிற் பார்ப்பவர்க் கின்பம்ப லிச்குமே (29)

மதங்கு.

கட்டளைக்கலித்துறை.

பலியாக வன்பொடு பார்ப்பார்நெஞ் சைம்மருப் பாற்றினன்பர்
கலிதீர்க்குக் தேசிவி நாயகன் கோயிலிற் கண்மருட்டிச்
சலியாது கொங்கைகளு லுக்கிநின் றுடும தங்கிகண்வாண்
மலிவாமைக் காப்பன் மறித்தில ளேல்வெட்டி வாங்கிடுமே. (30)

கலிநிலைத்துறை.

வாங்கு வாரிசூழ் மண்ணினற் கோடையம் வரைப்பி
லோங்கு தேசிவி நாயகா வொருமருப் பொடித்து
றாங்கு கைம்முகச் சூரனைத் தொலைப்பவோ சுடர்ப்பொற்
பாங்கு மால்வரை பாரதம் பகர்பவோ பகரே. (31)

நேரிசை யாசிரியப்பா.

பகருதற் கினிய பரம பதிகிலை
யகமுறத் தெளிந்த வகத்திய முனிதன்
கரக நீரைக் ககமாச் சென்று
பரவிந் திரன்காண் பகமுறக் கவிழ்த்து
மரிய தக்க னன்பறிந் தன்பொடு
முக்கல முனியாய் முன்பிற் றோன்றித்
தக்க ஞானத் தரிசன மளித்து
மதிதன் சிரவண மதிமுற் பக்கச்
சதுர்த்திநோன் பேற்றுத் தனிப்பழி தவிர்த்தமிவ்
வற்புத வருண்டம் பற்பல புரிந்து
புற்புத முலையெழிற் புத்தி சித்தியும்
விற்பன மோதை மிளிர்பிர மோதை
சொற்கனிச் சுமுகை சுந்தரி மனோரமை
கற்புறு மங்கலை கேசினி காந்தை
காசறு சாரு காசை சுமத்திமை
தேசுறு நந்தினி திகழ்கா மதையு
மாசில்வல் லபையொடு மன்னுங் கோடைத்
தேசிக விநாயகன் சித்த மிரங்கிக்
காசறத் தென்னைக் காக்கக்
கூசுவான் கொல்லோ குணமுடை யோனே. (32)

நேரிசைவெண்பா.

குணக்கெழுஞ் செஞ்சுடரோ குங்குமமோ துப்போ
கணச்செம் மணிநீர்க் கடலோ—மணத்தினொடு
காசிலகுங் கோட்டாற்றுக் கந்தனுக்கு மூத்தவருட்
டேசிகவி நாயகன்மெய்த் தேசு. (33)

குறளவெண்பா.

தேசிகவி நாயகனைத் தென் கோட்டாற் றிற்புகழ்ந்து
பேசிடார் மண்ணிற் பிற. (34)

வெண்டாழிசை.

பிறங்கு கடலையென் பெய்வளையா ளுண்ணுகிலா
ளுறங்கு கிலாள் கோட்டாற்றுத் தேசிகவோ ரும்பலை
மறந்திலளென் சொல்வனுண்பாண் மண். (35

கலி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மண்டையிலே யிரந்துண்ணு மகேசனருண் மைந்தன்
மதியணிதே சிகமுன்னோன் வளர்தரு கோட்டாற்றிற்
றண்டையிலே மறையரற்றுந் தலைவியருட் களியேந்
தாலத்தி லுன்னிறக்குஞ் சான்றோர்க ளுண்டாற்
றொண்டையிலே யமுதூறுஞ் சோதிசுழு முனையாந்
துணையாவோ மென்றெமொடு தைத்திடுவா யுன்ற
னண்டையிலே யகிலமெலா மடங்குமற்ற வெளியா
மனுதினமு மானந்த மாக்குமப்பா வறியே. (36)

பாண்.

கட்டளைக்கலித்துறை.

அறுகார் தொடையணி தேசிகன் கோடை யருள்வணிகர்
மறுகார்வல லூரான் வரவிட்ட தூதென்று வந்தெதிர்ந்தாய்
சிறுகாற் றொடுபிடி தியாகப் பாணவுன் செய்திகண்டேன்
வெறுவார்த்தைகூறுதல்வேண்டாமுன்றாதொக்கும்வேசையர்க்கே(37

(இதுவுமது)

வேட்டார்க் கருள்செயுந் தேசிவி நாயகர் மேவுமுயர்
கோட்டாற்றின் மன்னும் வணிகர் மருகன்ன தொற்றவரின்
பூட்டாத் தனுமுத லானைநற் பாணிற் புகழ்ந்திரந்தந்
தீட்டாக்கல் வீசிச் சினந்தாள் கட்சேப்புச் சிதைக்கிலயே. (38)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிதையாத சிந்தை யுடனேக னிர்து திறனும கிழ்ந்து திகழுன்
கதையாக வின்று கழலேமி னைந்து கதிநாடி யன்பர் தொழநான்
பதையாதி யங்கு பிணமாய லைந்து பவமீது றங்க வசமோ
சதையோட னங்கள் வளர்கோடை யைங்கை மிளிர்தேசி தும்பி
முகனே. (39)

கலிவிருத்தம்.

தும்பிக் கையுறு தேசிகத் தும்பியை
நம்பிக் கையொடு கோடையி னுடுமின்
கும்பிக் கையிரை கொள்ளு நமரங்காள்
வெம்பிக் கைதொழு வான்சமன் மெய்ம்மையே. (40

இணைக்குறளாசிரியப்பா.

மெய்யன் பர்க்கு வினைத்துய ரகற்றலும்
பொய்யன் பர்க்கவை புகட்டலுந் தொழிலாஞ்
செக்கர்ச் சிந்தா மணிவிநா யகவோ
விக்கின ராச விமலவோ
வக்கிர துண்ட வரதவோ
பரையருள் பால சந்தி ரரவோ
கரியமான் மருகக் கசான னவோ
மல்லா ரனவந்த மயூரேசயோ
சொல்லா டத்தகுந் தூமகேதுவோ
டுண்டிவி நாயக வோடுண்டி ராசவோ
வண்டமிழ்க் கிரங்கு மகோற் கடாவோ
வல்லபை கணேசவோ வரதக ணேசவோ
வோவென் றன்பர்க ளுருகிக்
காவென் றிறைஞ்சவுட் கனிந்து

கார்வளர் கண்டன் கைத்தடி யடித்துச்
சீர்செயுங் கோடைத் தேசிவி நாயகா
காலனை வெருவிநின் கழலடி யடைந்தேன்
சீலவக் கழலினிற் சேர்த்தருள் வாயே. (41)

நேரிசைவெண்பா.

சேருமே பொருளெல்லாஞ் சேரும் பரகதியெப்
பாரும் பரவப் பலிக்குமே—யோசிற்
றிகழ்கின்ற கோட்டாற்றிற் றேசிகமுன் றோனை
மகிழ்வோடு கண்டிறைஞ்சு வார்க்கு. (42)

குறம்.

மடக்கு தாழிசை.

வாராய் செங்கை யனமேசுவை வாயா சுதை யனமே
வருநெல் லொன்று மூன்றே கா மருவிற்றுள மூன்றே
சோரக மஞ்சேனலுஞ் சேர்பின்னரு மஞ்சே
சிறுறுண் ணிடைக் கொம்பேசுகஞ் செயுமொன்றெனக் கொம்பே
ஏரா ருளிற்கண்ணேயெணி லெழின்மூன்றவை கண்ணே
யெழுந்த வஞ்சு கரமேதரு விசைகோடைந கரமே
கூராருன்கை கரியேகுறக் குறிதேசிகக் கரியே
குழையாய்மிகா தரவே பழங் கூறைகஞ்சி தரவே. (43)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தருவுடையான் றுதிக்கைக்குத் தகுந்துதிக்கைத் தருவே
தானவருந் தனைவழுத்தத் தவமருளுந் தவமே
நிருவிகற்ப நிலையினர்க்கு நிழலளிக்கு நிழலே
நினையாது நினைபவருண் ணிலையமுறு நிலையே
திருவளருங் கோடைநகர் தெளியவளர் தெளிவே
தேடியன்பர்க் கருள்புரியுந் தேசிவிநாயகனே
யுருவுகொடு பிறந்தவெனை யுறவுகொள்ளு முறவே
யுன்றனையே சிந்தைசெயு முயர்மதிதந் தருளே. (44)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மதிதவழ் கின்ற பொழில்வளை கோடை வளநகர்வணி நர்தம்மறுகிற்
கதிதர வளருந் தேசிக வைங்கைக் கயமுக மிளிர்கண பதியே
விதியினை நினையா திடமனை வெருவா வினைமத னையுமதி யாது
துதிகொளு முனையே துணையென நினையுஞ் சுகமருள் வேண்டுமென்
றனக்கே. (45)

மடக்கு.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தனக்கென் றொன்று முள்ளானே தலையும் பொறையு முள்ளானே
வனச்செஞ் சடைவெண் மதியானே வளர்தே சிகனன மதியானே
மனத்தைநவ கரணகோட் டாற்றானே மலையினொருகோட் டாற்றானே
கனத்த கதையைத் தந்தானே கருதா விடிலே தந்தானே. (46)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவண்ணவிருத்தம்.

தானேவி யந்து தனையேபு கழ்ந்து தவமேம றந்து தளராதே
தேனேரு செஞ்சொ லுடனேநி னைந்து தெளிவோடி றைஞ்சவ
ருள்வாயே, கானேரு பொங்கர் மலிகோடை மிஞ்சு கவினாரு மை
ந்து கரநீடா, மானேருசிங்க ளணிதேசி யங்கண் வளர்தீர விண்டு
மருகோனே. (47)

நேரிசைவெண்பா.

மருந்துன் புயமாமென் மான்மயனேயைக் கந்நாள்
வருந்துமுயிர் மாரனம்பால் வாடல்—தெரிந்துவயல்
கூழ்வழங்குங் கோட்டாற்றுத் தேசிகவோர் கொம்பவுயிர்
வாழ்வளிப்பா யன்போடு வந்து. (48)

வண்டு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வந்திரந் தடியார் வணங்குதே சிகநல் வாரண மன்னுகோட்டாற்றி
லிந்திரன் வருண னெழிற்குகன் திருமா லிருநில மலர்களுநுகர்ந்தங்
கந்தர மகளிர் குழல்களி னணுகா தணிமலர்த் தாதுங்கொள்ளளியே
சந்திரமுகத்தென் றையல்வாய்க் குமுதத் தனிமண மவனுறிற்
சாற்றே. (49)

பொய்பாராட்டல்.

நேரிசைவெண்பா.

சாற்றரிய தேசிகனார் தந்திமுகன் கோட்டாற்றென்
னேற்றமின்னே நின்பதத்தி னேர்பெறற்கா - நாற்றமுறக்
கண்ணீரி றைத்துமொரு காலினின்று கஞ்சமென்றுந்
தண்ணீரிற் செய்யுந் தவம். (50)

கலி விருத்தம்.

தவமு மன்புறு தானமுஞ் செய்யினு
முவம கன்றிடு வார்கொலோ கோடையிற்
சிவப ரன்சுதன தேசிக மாமுகத்
திவனை முன்றொழு மின்பறி யாரரோ. (51)

நேரிசைச் சிந்தியல் வெண்பா.

அன்புறநற் றேசிகனு மைங்கரனைக் கோட்டாற்றி
னின்புறநின் றேத்தாத வீனர்க்குப்—புன்புலியல்
செனுமிறு மோயுட் டிருக்கு. (52)

கார்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமருப்பாற் றெழில்வணிகர் தெருவில்வளர் கருணை
திகழுமொரு மருப்பைங்கைத் தேசிவிநா யகனைபோன்
ெருருபிறைக்கொம் புடைப்புகரோ டுறுகாயத் தோடார்க்
குதவுமருண் மழைக்கைவள ருயர்கரித்தே சுடனே
வருமுகிலே நினதருள்போல் வையகமற் றிலையால்
வாரமுட ஞன்புகலும் வாய்மையொன்று நீடைந்
தருகிகரைங் கையன்பர் தழுவியெனைக் கொளுநா
டாமிதமின் றேலதனைச் சாற்றியகல் வாயே. (53)

கட்டளைக்கலித்துறை.

வாயாத மானுடச் சன்மத்தில் வந்துமுன் மாணடியை
யோயாது சிந்தித் துயர்கதி சேரு முரிமைவிட்டுப்
பேயாக வோடிப் பிதற்றுந ரின்பம் பெறுவதென்னே
யாயகரி லார்தொழுங் கோட்டாற்றுத் தேசிக வைங்கரனே 54)

இரங்கல்.

வெண்டுறை.

காவிலர்முன் பண்ணியங்கொம் பங்குசம்பா சங்கலசங் கவி
னத் தோன்றி, வாமளிக்குந் தேசிகவி நாயகனு ரன்பிறொடு வளர்
கோட்டாற்றின், மாமிலங்கும் புன்னைமிசை மன்னுபுற வீரே, சுர
மகன்ற வன்பருக்கென் றுபாதுசொல் வீரே. (55)

நேரிசைவெண்பா.

வீரமொடு மூவுலகு மேவுமுய ருந்தருவை
வாரமொடு கேதனமா வானுயர்த்த—நீரமுறு
கோட்டாற்றுத் தேசிகவோர் கொம்புடையே ரம்பனருட்
பாட்டாற்று வார்க்காம் பதம். (56)

வஞ்சிவிருத்தம்.

பதங்க ளுடிநர் பன்னதி
மதம்பெய் தேசிக மாமுகன்
சதங்கை சூழ்கழல் சார்வருட்
பிதுங்க நாடிலர் பின்னமே. (57)

காமமிக்ககழிபடர்கிழவி.

கட்டளைக்கலித்துறை.

பின்னேசெங் காறலை முன்னீட்டி யோடும் பெருங்குருகீர்
என்னேசர் தேசிவி நாயகன் கோடைவிட் டேகினராத்
தங்கேச வெண்ணெஞ் செனைநீத்தே கிற்றதைத் தாமெதிர்ந்தா
லங்கேச ரிங்குறு முன்னே வரச்சொலு மன்புடனே. (58)

கலிநிலைத்துறை.

அன்பரானவ ரமரர்க ளயனரி யவர்க்கு
முன்ப ராகிநற் கோடையிற் றேசிக முனிதா
ளின்ப மெங்கணு மெய்துவ ரேனைய ரிகத்துத்
துன்ப மாந்திப்பின் மறுமையு மெய்துவர் துன்பே. (58)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

துன்போது நகைப்புரக்குந் தேசிகநா யகன்கோடைத் தரு
மந் தன்னி, லென்போது முடல்பசந்தாய் சிறையுற்றாய் வாய்
சிவந்தா யிசைதேர் கிள்ளாய், மென்போது தொடுத்தமண மாலை
யன்பிற் சூட்டாது விட்டே கென்றன், மன்போது முனையொரு
மன் றுறந்தனனோ விரகமுண்டோ மயங்கற் கென்னே. (60)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மயங்கி யன்பின் வழுத்திநின்ற வடிவே லற்கா
வனத்திலொரு மதமாவாய் வள்ளிக் குள்ளப்
பயங்காட்டி யருள்புரிந்த பவள மேனிப்
படர்சடைமுக் கண்ணுடனே பகர்கோட் டாற்றிற்
றயங்கவளர் தேசிகநா யகன்றன் றுள்க
டமைநினைந்து பணிபவர்க்கே சகத்தின் மிக்க
நயம்பெருக்கிப் பகைதவிர்த்து நலிநோய் தீர்த்து
நனிபெறுநல் லின்பமெல்லா நல்கு வானே. (61)

கலிவிருத்தம்.

நல்கு வானருட் டேசிக நாயகன்
மல்கு கோடையில் வாழ்த்துநர்க் கிப்புவி
ஒல்கு சிந்தை யொழித்துயர் வாக்கறம்
புல்கு பொன்னற் புகழ்சுகம் போகமே. (62)

நேரிசை வெண்பா.

போகமருள் கோட்டாற்றுப் பொற்றேசி கைங்கரவோர்
வேக விரணியனை வீழ்த்திடமான்—மோக
வரிமுகத்தைக் கொள்ளு மறிவுதிப்ப வோமுன்
கரிமுகத்தைக் கொண்டாய் கனிந்து. (63

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கனியிருக்கக் காய்நுகரக் கருதுநர்போ லுனுன்
கழலிருக்க நீயிருக்கக் கவின்கோட்டா றிருக்க

தனியிருக்கு மிருக்கவின்றன் றன்னருளு மிருக்கச்
சார்ந்துபிற காடலைந்து தவித்துழன்று சலித்தே
னியிருக்க மாநினது நான்மலர்த்தாள் பிடித்தே
னழுவிவிடா திருக்கவரு ளல்குவையோ தெரியேன்
முனிவர்கட்குத் தேவர்கட்கு முத்தர்சித்தர் கட்கு
முத்திதருந் தேசிகனு முனிமுகமுன் னோனே. (64)

வேறு

முன்னோனை முக்கணனை முத்தொழில்வல் லோனை
மூவுலகு நிறைந்தவனை முனிமுகனை யன்பாற்
பின்னோனு மாறுமுகன் பேணுமரு ளோனைப்
பெரியமுகின் மேனியன்றன் பிரியமரு மகனைக்
கன்னோன்மை புறவிலுமுற் காதலனைக் கோடைக்
கணபதியைத் தேசிகனுங் காமதைகோன் றன்னை
நன்னோன்பி னாற்றுதி நாளுநாந் துதித்துன்
னுடினையேற் பிறந்தபய னுடினையா மனமே. (65)

செவிலிதன்னறிவின்மைதன்னைநொந்திரங்கல்.

கட்டளைக்கலித்துறை.

மனமேவு தேசிவி நாயகன் கோடையென் மங்கையிந்தத்
தினமேய ருந்துக நாளைக் கெவர்கொலென் செய்குவையென்
றனமோடு ரைத்ததை யாய்ந்தில னேயவ ளன்பநொடு
கனலேய ருஞ்சுரஞ் சேர்ந்தேயந் தோபயன் காட்டினளே. (66)

ஆசிரியத்தாழிசை.

காணவுங் கருதவுங் கவின்மொய் கோடையிற்
பேணவும் பிறங்கினன் றேசி யைங்கரன்
கோணிடர் குணர்ந்தருங் கரங்கள் கூப்பவே. (67)

விருத்தக்கலித்துறை.

கூப்பாத கைகள் குடிலுக் கிணைத்த கொடுங்கைகணன்
ளுப்பாத்தியத்தி னவிலாத நாக்குத் தறிநாக்கெமைக்
காப்பாயென் றும்பர் தொழுந்தேசிகக்கைக் கரியைப்பல
தோப்பாரு கின்றநற்கோட்டாற்றிலுன்பர்தொழார் துன்பமே.(68)

தலைவியிரங்கல்.

ஒருபொருண்மேன்மூன்றடுக்கிதவெள்ளொத்தாழிசை.

தன்பொழியக் கோட்டாற்றுத் தொந்திவயிற் றைந்துகரத்
தென்பெருமா னின்பாலந் தெய்திலனே யெய்துவனேல்
வன்புவியி லின்றோ வயம்.

அன்னமலி கோட்டாற்றி யானைமுகத் தம்மான்றன்
பின்னமற வந்தென்னைப் பேணிலனே பேணுதல்போன்
மன்னவனுக் குண்டோ வயம்,

தென்புவியிற் கோட்டாற்றுத் தேசிகவி நாயகனென்
றன்பிறக்க வன்பாகத் தோன்றிலனே தோன்றிவந்து
மன்புரக்கி னுமே வயம். (69)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வயன்மேவு கஞ்ச மலரேய்ப தங்கள் வனமுண்மிதிப்ப வசமோ, கயன்மேவு கண்கள் பொழிநீர் துடைத்துக் கடவெம்மை தீர்க்க வுளரோ, மயன்மேவி யைங்கை வளர்தேசிகேசர் மகிழ் கோடைவீழி யுடனே, புயன்மேவு கின்ற புனலேவறப்பப் புகை யார் சுரஞ்செல் மகளே. (70)

இன்னிசைவெண்பா.

மகம்விளங்குங் கோடை வணிகர்மறு கார்ந்தென்
னகம்விளங்குந் தேசிகனை மத்திமுக மோடு
நகம்விளங்கு மேனியனை நாடுமன்பர் கட்குச்
சுகம்விளங்குஞ் செய்யுமின்மெய்த் தொண்டு. (71)

இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

தொண்டு புரிமினுந் துன்பமெலா நீக்கிடுவான்
றெண்டிரைசூழ் கோட்டாற்றுத் தேசிகவி நாயகனை
யண்டிக்கேட் டைவிட் டகன்று. (72)

தூது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கன்றுகுணி லெனக்கொண்டோன் கன்னியர்பன் னிருவர்கடங் கணவ னுகி, என்றுமினிர் தேசிகனைக் கரன்கோடைக் கிருங்கடல்

சேர்ந்தேகுங் காரோ, ஒன்றுனையிங் கிரக்கின்றேனெனைச்சேர்ந்து துறந்தகன்ற வொருவே லர்க்குத், தன்றமத னம்புகளென் னுயிர் கொளுமுன் செல்கவெனச் சொல்க வென்றே. (73)

கலி விருத்தம்.

சொல்லின் போடு துதியுமின் கோடையிற்
செல்லின் மிஞ்சருட் டேசிவி நாயக
னல்லின் மிஞ்சு மகவிரு ணீக்கியே
நல்லின் பீகுவ னுசனும் போற்றவே. (74)

நிலமண்டிலவாசிரியப்பா.

போற்றுமி னேத்துமின் புகன்மின் புகழ்த்துதி
யாற்றுமி னாற்றுமி னனன்முன் னரக்கென
வுருகுமி னுருகி யுள்ளுமின் விழிநீர்
பெருகநின் றுடுமின் பேணுமி னன்பொடு
வழுத்துமின் வளையுமின் வணங்குமின் பொழிற்கனி
பழுத்திழி யிரதம் பாய்ந்துகா லோடி
வயல்விளை கின்ற வளம்பல வோங்கு
மியல்புறுங் கோட்டாற் றிபமுக வைங்கைத்
தேசிவி நாயகன் சேவடி தொழுமி
னுசறுத் தருட்கதி யருளுவ னறிந்தே. (75)

ஒருபொருண்மேன்மூன்றடுக்காசிரியத்தாழிசை.

அறிந்துயர் கோட்டாற்றி லெனதத்திமுகத் தோனுன்
மறிந்திடுமுன் னென்முன் வருவானோ வந்தாற்
சிறந்தவறு கின்கான் செழிக்குமனை மந்தோ.

மன்னுமெழிற் கோட்டாற்றென் மானுடலங் காடு
துன்னுமுனே யோர்கொம்பன் றேன்றுவனோ தோன்றின்
மின்னுமொரு கொம்பொளிமுன் மேவுமனை மந்தோ.

செழிக்குமருட் கோட்டாற்றுத் தேசிவிநா யகனார்
பழிக்குமுனே வருவானோ பழிக்குமுனம் வரினே
வழிக்குறியா குத்துவச மன்னுமனை மந்தோ. (76)

தூது.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அன்னமலிந் துன்னும்வயன் மன்னுயர் கோட்டாரு
மணிநகரின் வணிகர்மறு கைங்கரத்தே சென்று
னென்னுடைய நுதலெழிலும் விழியெழிலு முலையா
மிணையெழிலு முட்பாச மெனுமெழிலுங் கவர்ந்தே
தன்னிடத்தைங் கைகளினுந் தனிக்கோடங் குசநீர்
தாங்குடம் பண்ணியம்பா சம்மெனவே கொண்டான்
பின்னமிலா வக்குறிகள் கரிநாடி யவனைப்
பேணிமகிழ் வித்தனமே கூட்டிவரு வாயே. (77)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வரும்போ மென்னு மொழிதீர மணிபொன் னிலையாய் வளர்
கோடைக், கரும்போ டுறழு மொழிவலலைபை கணவா தேசி விநாயக
கான், சுரும்போ டறுகம் பைந்தொடையாய் சுமுகா வெனவு
தொழவருணீ, தரும்போ தன்றி வாய்த்திடுமோ தருவா யன்பு தமி
யேற்கே. (78)

பஃறொடை வெண்பா.

தமியேன் கொடியேன் றளர்ந்தே தரையி
னுமியேனு மன்போ டுதவார்பாற் சென்று
விமியேக ரைந்தழலும் வீண்டொழிலை யன்னை
தவநிலையி னுடையதன் றந்தையென மேவிச்
சிவவடிவக் காட்சிதந்த தேசிகவோர் கொம்ப
குமுதம் விரிக்குமுத்தங் கூடும்வயற் கோட்டாற்
றமலவைங் கையா யகற்று. (79)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அசன்ற சிந்தை யொடுதயையு மறிவும் பொறையு மருணிறையுஞ்
சகங்க ளெல்லாந் தானென்றுட் டாங்குங் குணமுந் தருவாயே
முகுந்த னருந் தொழுங்கோடை முக்கட் டேசி கைங்கரனே
யிகந்து வேண்டற் குனையன்றி யெனக்கு வேறு திக்கிலையே. (80)

காலம்.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திக்கெட்டொ டண்டங்க ளுந்துஞ்சு காலமுந் திங்களும்
போங்கா லமுந், தினகரனும் விண்மீன்க ளுஞ்சிந்து காலமுந்
தேவருஞ் சாங்கா லமுஞ், சக்குற்ற வுடலனும் பிரமனும் விண்டு
வுஞ் சண்டனும் போங்கா லமுந், தத்வநிலை யாக முதலவனே
டொடுங்கியே தானிற்குமாமாதலால், முக்கற்க ணுயர்தவ மூனிக்கு
ரியதேசிக முன்னவன் கோட்டாற் றினன், முத்திபெறு தற்குரிய
காலமெக் காலமு மொக்குமென்றும் மற்றவை, பக்கத்த னன்ப
ரொடு தனிமையாய் நின்றிலகு பதிதரும் பல்கற் பமாம், பலகால
மாகுமவை யன்றியிலை யென்றுமே பகர்தரு நற்கா லமே. (81)

வஞ்சிப்பா.

காலைத்தெறு கயிறுற்றிடு
சீலக்கர மிளிர்தேசிகப்
பாலக்கண பதிமாமலர்க்
கோலக்கழல் குறிவைத்தக
    நாளும்
வாதில்சீர் கோடையில் வணங்குநின்
மேதிமேல் வருமவன் வினைதெறு வானே. (82)

கட்டளைக்கலித்துறை.

வானோடு மண்ணும் வழுத்துந்தென் கோடையின் வல்லையமா
மானோடு மன்னுநற் றேசிவி நாயகன் மாணடியைத்
தேனோடு பாலுங் கலந்தாங்கின் சொல்லிற் றினந்துதிப்போர்
மீனோடு லாவுறு மேலோரு மேத்த விளங்குவரே. (83)

இன்னிசைவெண்பா.

விளங்குமெழிற் கோட்டாற்றின் மேன்மைமிகு நெஞ்சே
யுளங்குளிரத் தேசிகனு மும்பன்முகத் தோனைக்
களங்கமன மற்றுரிய கண்மணிவெண் பூதி
வளங்கொளமெய்க் கொண்டுநின்று வாழ்த்து. (84)

நேரிசைவெண்பா.

வாளுமம்பு மாரன் வலித்துவிட்டான் கோட்டாற்றெந்
நாளுமகிழ் தேசிகவி நாயகனே—நீளென்
கமழ்குழலா டன்னைக் கருக்கிக் கருக்கு
மமளியையுங் காம வனல். (85)

தவம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அனலையமர்ந்துமுயர் வளியேறு கர்ந்துநனை யலையேபுகுந்து மகழார், புனலோடு றைந்துமிருள் வனமேய டைந்துமகி புரிவார்கள் செய்தவமெலா, மனமேயி சைந்துயிர்கண் மகிழ்வான லனியோடு வாழ்வார்மு னீடாகுமோ, தனமேவு கோடைவளர் தேசிகவி நாயகர் தாளோது தவமன்றியே. (86)

ஷை

தவமாகு மிஃதென்று நண்ணாசி முனையிலே சார்ந்துநின்றே செய்யினுஞ், சிவமாகு மிவையென்று பிறவுயிர்க டங்களைத் தேடிப் புரக்காரெனி, லவமாகு மல்லாது தவமில்லை யாதலா லன்போடு கோட்டாற்றினி, னவமாக வமர்கின்ற தேசிகவி நாயக னறைதுன்று தாணம்புமே. (87)

கொற்றியார்.

நேரிசைவெண்பா.

நம்பன்கு லக்குறியா நாமந் துழாய்வேய்ந்த
கும்பங்கொண் டாடியமால் கொற்றியே—நம்பனருள்
தேசிகவி நாயகனார் சிந்தையேன் கோட்டாற்றென்
கூசினையுட் சங்கையுண்டோ கூறு. (88)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூன்காட்டும் பிறைகாட்டுங் குங்குமச்செந் நிறங்காட்டுங் குலையாவேணி, மான்காட்டும் விழிகாட்டு மதிமுகஞ்செவ் வாய்குமுதம் வயங்கிக் காட்டுந், தேன்காட்டுஞ் சொல்வலையை திகழ்பா

கங் காட்டுமைங்கை தெரியக் காட்டும், வான்காட்டுந் தண்டலை
கள்வளர்கோடைத் தேசிகமா முகவ னூர்க்கே. (89)

வண்ணக்கலித்துறை.

மாமுக மோடுறு தேசிவி நாயகர் மதியீவார்
காமுக ராதியர் நேசமு றுதுயர் கதிர்நீடு
சீமுக மாருந லோருற வாயவர் திறமாவாழ்
பூமுக மாவளர் கோடையி லேதுதி புகல்வீரே. (90)

கட்டளைக்கலித்துறை.

புகலேயென் றுள்ளுனித் தேசிவி நாயகன் பூங்கழலை
யகலேனெ னத்திருக் கோட்டாற்றி லேத்துமுள் ளன்பினர்தாள்
பகலோ டிரவுறப் பன்னூறு மேத்தும் பணியினரை
யிகலேயி லாமலெந் நாளும் புகழ்ந்திடு மெண்டிசையே. (91)

பிச்சியார்

நேரிசைவெண்பா.

திசைமுகவன் செல்விகள்கோன் றேசிகவைங் கைய
னிசையமருவுங் கோட்டாற்றி லின்ப—நசையாற்
றலைமழுக்கி வேலெடுத்துச் சார்ந்தபிச்சி யேநின்
கலைமுகத்திற் காண்பொருளென் காட்டு. (92)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காசினியும் விண்ணுமெணக் கடனஞ் சுண்ட
கண்ணுதறன் முதன்மகனுங் கவின்கோட் டாற்றுத்
தேசிகவி நாயகனே தென்கோ னீற்றிற்
சீறிவரு வான்கொலென்று சிந்தை சோர்ந்து
கூசியுட னடுநடுங்கிக் குலைந்தே கையுங்
குறைவகற்று வானென்னுங் குறிப்புந் தன்னைப்
பேசிநின்றேன் றுயர்வெயின்முன் பனிப்போற் றீர்த்துப்
பெரியவின்பச் சுகமளித்துப் பேணுவாயே. (93)

வேறு.

பேணினுநீ பேணுதே பிரித்திடினு நினது
பிரசமிழிந் தொழுகுமிதழ் பிறங்குமல ரடியைக
காணுவது மாற்றுகிலேன் கழறுவது மறவேன்
கருதுவதுந் துறவாதே கடைப்பிடிப்பே னதனுன்
மாணுறுநல் லளிநுகர மதுமழைபெய் துரும
மலரொடுபெல் கனிவழங்கும் வளமுறு கோட்டாற்றிற்
சேணுறவா ரிறைஞ்சவளர் தேசிவிநா யகனே
சிறியனெனை யன்பினொடு சிந்தைமகிழ்ந் தருளே. (94

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிந்தனை யுடையார்க் கின்பருள் கோடைத் தேசிவி நாயகா சிறியேனு, சந்தத வன்பு நந்தனந் தனக்குத் தண்புனல் பாய்ச்சிட வேவா, வந்தனப் பாடல் யாக்கையோ டெடுத்து வாவ்வரை வைத்திடச் செய்யா, தெந்தம தன்பும் பாடலுஞ் சுகமா யேற்றணிந்தின்புறற் கிரங்கே. (95)

கலிவிருத்தம்.

இரந்து ளன்பொ டிறைஞ்சுநர்க் கின்னருள்
சுரந்து கோடையிற் றூயறு கந்தொடை
சிரந்து ளங்கருட் டேசிவி நாயகன்
கரந்தி டாதளிப் பான் கவின் சித்தியே. (96)

ஊர்.

இன்னிசைவெண்பா.

சித்திபுத்தி கோனுருந் தேசிகவி நாயகனூர்
நித்தியத்தி னெங்கு நிறைந்தாலு—நல்வணிகர்
வர்த்தகத்தால் வாழும் வளநகராங் கோட்டாறே
யுத்தமத்தில் வாழ்கின்ற வூர். (97)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஊருகின்ற வுந்துருவை யோர்துவச மாக்கொண்
டும்பருட னிம்பர்தொழு தய்ந்திடுவா னுன்னிக்

காரிலங்கு முயர்துருமக் கவின்மிகு கோட்டாற்றிற்
காணவளர் தேசிகவி நாயகன்றன் கழல்கள்
சீரிலங்கு நால்வகையாஞ் செறிமலரு மறுகுந்
தேடிமன தோடிடவுந் திகழ்சொன்மலர் நான்காற்
தாரிலங்கத் தொடுத்தன்பிற் றரவுமறி யாதேன்
றனக்கருளும் பயனெவனோ சகத்திலறி யேனே. (98)

கலிநிலைத்துறை.

சகத்து வெண்கரி தருமருப் பாற்றினிற் றனிமெய்
நகத்து திக்கையந் தேசிவி நாயக னலமார்
மகத்து வப்புகழ் வாயினால் வழுத்தினார் நானு
மகத்து ளார்கள்வல் லந்தகாரங்கொளாஞ் ஞானம். (99)

நேரிசைவெண்பா.

அஞ்ஞான நீக்கியென்னுள் ளார்ந்தனரால் கோட்டாற்று
மெய்ஞ்ஞான தேசி வி நாயகனா—ரெஞ்ஞான்றுஞ்
சித்தக் கமலத்திற் செவ்வியதந் தாட்கமலஞ்
சித்திக்க ஊற்றுமருட் டேன். (100)

[முற்றிற்று.]

விக்டோரியா பிறஸ், நாகர்கோவில்—1915.

பிழைதிருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	11	தெனக்கு	தெமக்கு
2	30	சரணக	சரண்க
5	21	வகுதா	வருதா
6	30	பனுமதி	னும்பதி
7	17	வளள	வள்ள
9	17	சொல்	சொல
10	32	கெ ால்லோ	கொல்லோ
12	24	ரேசவோ	ரேசாவோ
14	10	சிகனன	சிகனன்
...	11	தைஙக	தைங்க
...	...	டாறறு	டாற்று
15	10	ரனகதன	ரன்கதன்
...	19	யகனபோ	யகன்போ
19	17	செனமக	சென்மக
22	7	மாதலால்	மாமாதலான்
...	15	பாலகண	பாலக்கண
25	2	ரடியைக	ரடியைக்